'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XVII மார்ச் கி.பி. 2026 சான்று : 195




## அவர்தம் காயங்களால்....

# தவக்கால களப்பணிகள்














**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

'தந்தையாம் ஆண்டவரை போற்றுவது அந்நாவே. கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதனை தூற்றுவதும் அந்நாவே. போற்றலும் தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதர சகோதரிகளே இவ்வாறு இருத்தலாகாது (யாக் 3: 9, 10) என்ற புனித யாக்கோபின் அறிவுரையை, ஆலோசனையை ஏற்று வாழ வாழ்த்துகிறேன், செபிக்கிறேன். உங்கள் அனைவரையும் இந்த இதழ் மூலம் சந்திப்பதிலே பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தூய ஆவியானவர் உலகம் முழுவதும் ஒரே தூண்டுதலைத்தான் தருகிறார் என்ற மாபெரும் உண்மை எனக்கு புரிய வந்த தருணங்களில், சான்றுகளில் இந்த நாவடக்கம் பற்றிய செய்தியும் ஒன்று. நமது திருத்தந்தை இந்த தவக்கால நோன்பு பற்றிய செய்திகளில் தெரிவித்த கருத்தும், அவருக்கு தூய ஆவியானவர் தூண்டியதும் இதுவே என்பதை நினைத்து கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். இந்த உயிர்ப்பு தின நினைவுப் பெருவிழா தயாரிப்பு காலத்தில் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் மூன்று என்று அவர் குறிப்பிடுகிறார். 1 செவிமடுத்தல். 2. நோன்பு-புதிய நோன்பு. 3. இணைந்து பயணித்தல். இந்த மூன்றில் நோன்பு பற்றி அவர் தெரிவித்த கருத்து, அதாவது புதிய நோன்பு என்ற தலைப்பில் தெரிவித்த கருத்து மிக முக்கியமானது. அதாவது சொல் நோன்பு அல்லது மொழி நோன்பு. திருத்தந்தை லியோ, சாம்பல் புதன் அன்று பாரம்பரிய நூற்றாண்டு பழமையான திருப்பயணத்தில் பங்கு கொண்டு நோன்பின் தொடக்கத்தை நினைவு கூறும் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நோன்பின் உண்மையான நோக்கம், உயிர்ப்பு தின நினைவு பெருவிழா தயாரிப்புக்கான செயல்பாடுகள் பற்றி விரிவாக பேசினார். திருத்தந்தை இவ்வாண்டு ஒரு புதிய பரிமாணத்துடன் நோன்பை கடைபிடிக்க அழைப்பு விடுத்துள்ளார். சுருக்கமாகச் சொன்னால் சொல் நோன்பு என்று அழைக்கலாம். உணவு மட்டுமல்ல கடும் வார்த்தைகளைப் பேசுவதை விட்டு விடல், மற்றவர்களை காயப்படுத்தும் வார்த்தைகளை தவிர்ப்பது என்ற நோன்பை அறிவித்துள்ளார். இதற்கான வழிமுறைகளை தூய ஆவியானவர் சென்ற இதழிலேயே நமக்கு விளக்கி விட்டார்.

நாம் இன்று மற்றவர்களை அதிகம் காயப்படுத்துவது, கவலை கொள்ள வைப்பது, சினத்தைத் தூண்டுவது, மன உளைச்சலை உண்டாக்குவது கடுஞ்சொற்கள் வழியாகவே என்றால் அது மிகையாகாது. புனித யாக்கோபு கூறுவது போல, தந்தையாம் ஆண்டவரை போற்றுவதும் அவரது சாயலாக படைக்கப்பட்ட மனிதரை தூற்றுவதும் எப்படி ஒரே இடத்தில் இருந்து வர முடியும்? போற்றலும் தூற்றலும் ஒரே வாயிலிருந்து எப்படி வர முடியும்? ஒரே ஊற்றிலிருந்து நன்னீரும் உவர் நீரும் சுரக்க முடியுமா? (யாக் 3: 8 -11). ஆனால் இவைகள் இயல்பாய் நடக்கிறதே! உப்புச் சுனையிலிருந்து நன்னீர் கிடைக்குமா? என்று புனித யாக்கோபு கேட்கிறார். திருத்தந்தை லியோ கூறி இருக்கிற சொல் நோன்பை நாம் பின்பற்றும்போது நமக்கு நாவடக்கம் கிடைக்கப் புனித யாக்கோபு கேட்ட வினாக்களுக்கு தெளிவாக பதில் அளிக்க முடியும்.

நம்மில் பலர் மரங்கொத்திப் பறவைகளாக உலா வருகிறோம். அதில் நாம் மனமாற்றம் பெற வேண்டும் அதற்கு சொல் நோன்பு அவசியம். ஒரு செயலைத் தொடர்ந்து 21 நாட்கள் செய்தாலே அது நமக்குப் பழக்கமாகிவிடும் என்று உளவியல் மிகத் தெளிவாகக் கூறுகிறது. அதுவும் 40 நாட்கள் தொடர்ந்தால் நிச்சயமாக அது பழக்கமாகிவிடும். நம் வசமாகிவிடும்.

செருக்கு மனிதருக்கென்று படைக்கப்படவில்லை. கடுஞ்சீற்றமும் மானிட பிறவிக்கு உரியதல்ல (சீ ஞா 10:18). செருக்கு மற்றும் கடுஞ் சீற்றத்திலிருந்து அனல் கக்கும் வார்த்தைகள்தானே வரும். பலரைக் குத்தி கிழிக்கும். எனவே ஞானத்தோடு நடந்து கொள்வோம். கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றி விடும். கடுஞ்சொல்லோ சினத்தை எழுப்பும்(நீ மொ 15:1). எனக்கு எதிராக நீங்கள் கடுஞ்சொற்களை உதிர்த்து வந்தீர்கள் என்று கடவுளே கேட்கும் (மலா 3: 13) நிலையில் தானே நாம் இருக்கிறோம். அறிவிலிகள் கடுஞ்சொல் கூறுகிறார்கள் என்று (சீஞா 18 :18) சீராக் ஞானம் கூறுகிறது. இறைப் பற்றில்லாதவர்கள் செய்த அனைத்து தீச்செயல்களுக்காகவும் இறை பற்றில்லாத பாவிகள் பேசிய அனைத்து கடுஞ்சொற்களுக்காகவும் தண்டனை வழங்குவார் (யூதா 1:15) என்பதை மறந்துவிடலாகாது. யார் இறைப்பற்றில்லாத பிறவிகள்? என்று திருவிவிலியம் கூறுகிறது. கடுஞ்சொற்களைப் பயன்படுத்தும் அனைவரும் இறைப்பற்றில்லாதவர்கள். எனவே சொல் நோன்பு காப்போம்.

பிறர் மனதைக் காயப்படுத்தாமல் கனிவான சொற்களால் மற்றவர்களை வருடுவோம். கோள் சொல்லுதல், புறணி பேசுதல், பிறரைப் பற்றி குறை பேசுதல்,பிறர் பெயரைக்கெடுத்தல் போன்ற தீய செயல்களை முற்றிலும் தவிர்ப்போம். பிறரிடம் பேசும் போது நாம் அவசியம் பின்பற்ற வேண்டிய உளவியல் வழிமுறைகள் சிலவற்றை காண்போம்.

1. பேசுவதற்கு முன்பு மூன்று வினாடி சிந்தித்தல்:

இந்த வார்த்தை அவருக்கு உதவுமா அல்லது காயப்படுத்துமா என்று நமக்குள்ளே கேட்டுக் கொள்ளுதல் .அந்த சிறிய இடைவெளி நமக்கு சரியான வழிகாட்டும்

2. 'நான்' மொழி பயன்படுத்த வேண்டும்:

நீ எப்போதும் இப்படித்தான் சொல்கிறாய் என்று 'நீ' 'நீ 'என்று சொல்வதற்கு பதிலாக, நான் இதனால் கொஞ்சம் வருத்தம் அடைகிறேன் என்று பிறரைக் குற்றம் சாட்டாமல் நம் உணர்ச்சிகளை பகிர்வது நல்லது.

3. கருணையுடன் கேட்டல்:

பேசுவது மட்டுமல்ல கவனமாக கேட்பது முக்கியம். திருத்தந்தை லியோ சொன்ன அந்த முதல் செயல்பாடு 'செவிமடுத்தல்' இங்கே கவனிக்கத்தக்கது. மற்றவர்களினா உணர்ச்சியை புரிந்து கொள்ள முயற்சிக்கும் போது வார்த்தைகள் மென்மையாகவும் கனிவாகவும் இயல்பாகவும் வெளிப்படும்.

4. கடுமையான வார்த்தைகளை தவிர்க்க வேண்டும்:

'எப்போதும்' 'ஒருபோதும் இல்லை' 'நீ செய்வது ,பேசுவது தவறு'. இந்த வார்த்தைகள் உறவுகளை பாதிக்கும். அதற்குப் பதில் 'இது வேறு விதமாக இருக்கலாமா?' 'இப்படி யோசிக்கலாமா?' என்று கேட்கலாம் பிறரைக் குற்றப்படுத்திப் பேசுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

5. கோபத்தில் இருக்கும் போது பேச வேண்டாம்:

கோபம் வந்தவுடன் பதில் கூற வேண்டாம். கோபத்தில், அதிக மகிழ்ச்சியில் இருக்கும் போது இயல்பான வார்த்தைகள் வராது. சிறிது நேரம் எடுத்துக்கொண்டு அமைதியாகப் பேச வேண்டும்

6. நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்:

ஒருவரின் நல்ல விஷயங்களை குறிப்பிடுவது உறவை பலப்படுத்தும். ஒரு நல்ல வார்த்தை பல காயங்களை ஆற்றும். காயப்படுத்தாமல் வார்த்தைகளை பேசுவது ஒரு ஆன்மீக பயிற்சி. கனிவான அறிவுரை மனதிற்கு திடமளிக்கும்(நீ மொ 27:9)

7. சொல் நோன்பை பின்பற்றுதல்:

இதன் முக்கிய அம்சங்கள் என்னவென்றால் உண்மையை மட்டுமே பேசுதல் .இனிமையான சொற்களை மட்டுமே பேசுதல். பிறர் காயம் ஆற்றும்படி பேசுதல். பயனுள்ளவற்றை மட்டுமே பேசுதல், தேவையான அளவு மட்டுமே பேசுதல். எனவே சொல் நோன்பு இருக்க திருத்தந்தை கேட்டுக் கொண்டிருக்கிறார் பேசாமல் இருப்பது மட்டுமே சொல் நோன்பு அல்ல .நல்லது, உண்மை , இனிமை மற்றும் பயனுள்ளதை பேசுவது தான் உண்மையான சொல் நோன்பு என்று உணர்ந்து, இந்நாட்களில் பேசுவோம். இதையே நமது பழக்க மாக்குவோம். இத்தகைய பண்புகளில் அனைவரும் வளர ஒருவர் மற்றவருக்காக செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

பிப்ரவரி 2026

## புதிய பணியாளர்கள் பயிற்சி

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 01.02.2026 அன்று நடைபெற்றது. இதில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 01.02.2026 அன்று நடைபெற்றது. 3 நபர்கள் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி V. செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 07.02.2026 அன்று நடைபெற்றது. இதில் 17 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை செயலர், நற்பணி X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 08.02.2026 அன்று நடைபெற்றது. இதில் 3 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி பெ. தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 08.02.2026 அன்று நடைபெற்றது. இதில் 6 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை செயலர், நற்பணி பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி-VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 08.02.2026 அன்று நடைபெற்றது. இதில் 3 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி சத்தியேந்திரன், நற்பணி அமலோற்ப ஆரோக்கிய ராணி, நற்பணி இரா அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி-VII அமைதியகம், காயாவயலில் 15.02.2026 அன்று நடைபெற்றது. இதில் 8 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை அருட்சகோதரி செலின்பிரபா, நற்பணி A. சகாயராஜ, நற்பணி S. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 15.02.2026 அன்று நடைபெற்றது. இதில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய அருள் நாயகம், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX சி.கே. மங்கலம், புனித பேதுரு ஆலயத்தில் 15.02.2026 அன்று நடைபெற்றது. இதில் 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சகாய தமிழ் செல்வி, நற்பணி J. மேரிபுஷ்பம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

பிப்ரவரி 2026

## கடந்த மாதச் செயல்பாடுகள்

01.02.2026 அன்று புதுக்கோட்டை திரு இருதய கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, செயலர் அவர்கள் வழிநடத்தினார்கள்

01.02.2026 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.சகாயராஜா, நற்பணி அமல்ராஜ் அவர்கள் வழிநடத்தினார்கள்

04.02.2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 32 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி பெமிலா, நற்பணி செபமாலை ஆகியோர் வழிநடத்தினர்கள்.

04.02.2026 அன்று அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 75 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி I. ஜோசப் சேவியர், நற்பணி P. சகாயராணி, நற்பணி X. மேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

8.02.2026 அன்று பட்டுக்கோட்டை உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி S. மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

8.02.2026 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா,நற்பணி S. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்

15.02.2026 அன்று அம்மாபேட்டை புனித வளனார் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை செயலர், நற்பணி A.R.சூசைராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்

15.02.2026 அன்று திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இதை நற்பணி L.ஆரோக்கியசாமி, நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்

22.02.2026 அன்று திருவாரூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை செயலர், நற்பணி S. மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

22.02.2026 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி, S. அந்தோனி பிரகாஷ் அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

20.02.2026 அன்று தேவகோட்டை புனித சகாய அன்னை கோவிலில் தவக்கால தயாரிப்பு தியானம் நடைபெற்றது. செயலர் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்.

21.02.2026 அன்று திருப்பத்தூர், கணக்கன்பட்டி மற்றும் சிங்கம்புணரி ஆகிய பங்குகளின் அன்பியத் தலைவர்களுக்கான தவக்கால தியானம் கணக்கன்பட்டி புனித சவேரியார் கோவிலில் நடைபொற்றது. இத்தியானத்தை செயலர் வழிநடத்தினார்.

22.02.2026 முதல் 400க்கும் மேற்பட்ட நற்செய்திப்பாணியளர்கள் சிவகங்கை,தஞ்சாவூர், கும்பபோணம் மறைமாவட்டத்தைச் சார்ந்த 75 க்கும் மேற்பட்ட பங்குகளில் தவக்கால களப்பணி ஆற்றி வருகின்றனர்.

கடவுள் பாவம் அறியாத நம் ஆண்டவரை பாவநிலை ஏற்கச் செய்தார். (2 கொரி 5:21) நம் ஆண்டவர் இவ்வுலகில் பிறந்தபோதே பாவமில்லாதவராகப் பிறந்தார். மரியாவிடம் வானதூதர் வந்தபோது உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது என்றார் (லூக் 1:35). அவர் பாவமில்லாதவராக வளர்ந்தார். யூதர்களைப் பார்த்து என்னிடம் பாவம் உண்டு என்று உங்களில் யாராவது என்மேல் குற்றம் சுமத்த முடியுமா? என்று சவால் விட்டார் (யோவா 8:46). இதுவரை உலக வரலாற்றில் எந்த மனிதனோ, எந்த மதத் தலைவர்களோ சொல்லாத, சொல்லமுடியாத வார்த்தை இது. விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை ஆண்டவரிடம் அழைத்து வந்து மோசேயின் சட்டப்படி இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும். நீர் என்ன சொல்கிறீர்? என்று கேட்டபோது உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும் என்றார். அங்கு வந்தவர்களில் அந்தப் பெண் மீது கல் எறியத் தகுதியுடைய ஒருவர் கூட இல்லை. ஏனெனில் எல்லா மனிதரும் பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போனவர்கள் (உரோ 3:23). எனவேதான் ஆண்டவர் சொன்ன வார்த்தையைக் கேட்ட அனைவரும் உள்ளம் குத்தப்பட்டு அங்கிருந்து சென்று விட்டார்கள். இப்போது அந்தப் பெண்மேல் கல் எறியத் தகுதியுடைய ஆண்டவர் மட்டுமே அங்கு நிற்கிறார். நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. இனிப் பாவம் செய்யாதே என்றார் (யோவா 8:1-11). எத்துணை ஆன்பு நிறைந்த ஆண்டவர் என்று எண்ணிப் பார்ப்போம். பிலாத்து தலைமைக் குருக்களையும் மக்களையும் பார்த்து இவனிடம் நான் குற்றம் ஒன்றையும் காணவில்லை. ஏரோத்துக் குற்றம் ஒன்றும் காணவில்லை என்றான் (லூக் 23:15). அவரைக் காட்டிக் கொடுத்த யுதாசு பழி பாவமில்லாதவரைக் காட்டிக் கொடுத்து பாவம் செய்தேன் என்று கூறிவிட்டு முப்பது வெள்ளிக் காசுகளையும் ஆலயத்தில் எறிந்துவிட்டு தற்கொலை செய்து கொண்டான் (மத் 27:3-5). சிலுவையில் அவரோடு அறையப்பட்ட குற்றவாளிகளுள் ஒருவன் இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே என்று பதிலளித்தான் (லூக் 23:41). எல்லாவகையிலும் நம்மைப் போலச் சோதிக்கப்பட்டவர் எனினும் பாவம் செய்யாதவர் (எபி 4:15). அவர் எப்போது சோதிக்கப்பட்டார்? தந்தைக் கடவுள் அனைத்து உலகின் பாவங்களையும் அவர் மீது சுமத்தினார். பாவமில்லாதவரைப் பாவநிலை ஏற்கச் செய்கிறார். அப்போது அவர் உள்ளம் கலங்கினார். இப்போது என் உள்ளம் கலக்கமுற்றுள்ளது. நான் என்ன சொல்லுவேன்? தந்தையே இந்த நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும் என்பேனா? இல்லை இதற்காகத் தானே இந்நேரம் வரை வாழ்ந்திருக்கிறேன் என்று தம்மைத் தாமேத் தேற்றிக் கொள்கிறார் (யோவா 12:27). ஒலிவமலையில் அவர் இருந்தபோது மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளாகியிருந்தார். இப்போது சீடர்களின் செப உதவி தேவைப்படுகிறது. சோதனைக்கு உட்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள் என்றார். ஆனால் அவர்கள் அச்ச உணர்வில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவரது ஊனுடல் இந்தத் துன்பம் வேண்டாம் என்று அதை மறுதலிக்கும்படி அவரை ஏவுகிறது. இந்த இடம் தான்அவர் சோதிக்கப்பட்டார். இதற்காகத் தானே வாழ்ந்திருக்கிறேன் என்று கூறியவர். இப்போது தந்தையே உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும் என்று வேண்டினார். அடுத்த நொடியிலேயே தூய ஆவியானவரின் ஏவுதலின்படி, ஆயினும் என் விருப்பம் அல்ல. உம் விருப்பப்படியே நிகழட்டும்' என்று கூறி தன்னை

முழுவதும் அர்ப்பணித்தார். அவரை நொறுக்கவும் நோயால் வதைக்கவும் ஆண்டவர் திருவுளம் கொண்டார் (எசா 53:10). அப்பொழுது விண்ணகத்திலிருந்து ஒரு தூதர் அவருக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார் (லூக் 22:43).

அவரோ மிகுந்த வேதனைக்குள்ளாகவே உருக்கமாக வேண்டிக் கொண்டிருந்தார். அவரது வியர்வை பெரும் இரத்தத் துளிகளைப் போல தரையில் விழுந்தது. மீண்டும் சீடர்களைப் பார்த்து சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் என்றார் (லூக் 22:40-46). அவரது உருக்கமான வேண்டுதலால் சோதனையை மேற்கொண்டார். நம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்தக் குரல் எழுப்பி கண்ணீர் சிந்தி மன்றாடி வேண்டினார் என்று அவரைப் பற்றி கூறப்பட்டுள்ளது (எபி 5:7). தந்தைக் கடவுள் அவரைப் பாவ நிலை ஏற்கச் செய்தபோது என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதறினார் (மத் 27:46). ஏனெனில் நம் விண்ணகத் தந்தை பாவத்தைப் பார்க்க இயலாதவர் (ஏசா 6:3). எனவே அவர் தன் மகனைப் பார்க்காதபடி தம் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அது வரை என் தந்தை என்னோடு இருக்கிறார். அவர் என்னைத் தனியே விடுவதில்லை என்று அடிக்கடி பாசத்தோடு அழைத்தவர் இப்போது ஒரு பாவநிலையில் நின்று தந்தையே என்று அழைக்க முடியாமல் என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதறுகிறார். இதுதான் கல்வாரி அன்பின் உச்சநிலை. ஏனெனில் அவர் வானத்தூதருக்கு துணை நிற்கவில்லை. மாறாக ஆபிரகாமின் வழி மரபினருக்கே துணை நின்றார். இங்கே ஆபிரகாமின் வழி மரபினர் என்பது இயேசு ஆண்டவரை நம் சொந்த மீட்பராக ஏற்று அறிக்கையிடும் நாம் என்று எண்ணி மகிழ்வோம் (எபி 2:16). கடவுள் நம்மீது கொண்ட அன்பு, அது மண்ணினின்று விண்ணகம் போன்று உயர்ந்தது என்பதை இங்குதான் நாம் அறிந்துகொள்ள முடியும். எனவேதான் தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் என்று கூறப்பட்டுள்ளது (யோவா 3:16). எனவேதான் புனித பவுல் இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், நீளம், உயரம் ஆழம் என்னவென்று உணர்ந்து அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக. அதன் மூலம் கடவுளின் முழு நிறைவையும் நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள் என்று குறிப்பிடுகிறார் (எபே 3:18-19). ஒரு நொடி பொழுது நமக்காகச் சிலுவையில் கைவிட்டாலும் மீண்டும் நீர் என் மைந்தன் இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன் என்று கல்லறையிலிருந்து அவரை உயிர்த்தெழச் செய்தார். (எபி 1:5) இப்போது தந்தைக் கடவுள் நம் முழு நிறைவும் அவருள் குடிகொள்ள திருவுளமானார் (கொலோ 1:19). எனவேதான் நம் ஆண்டவர் என்னைக் காண்பது தந்தையை காண்பது ஆகும் என்றார் (யோ14:9). நமக்காக அவர் பாவமானதால் இவ்வாறு தாமே சோதனைக்கு உள்ளாகித் துன்பப்பட்டதனால் சோதிக்கப்படும். நமக்கு உதவி செய்ய அவர் வல்லவராக இருக்கிறார் (எபி 2:18). எனவே தவக்கால களப்பணியாற்றும் நாம் சந்திக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்தக் கல்வாரி அன்பை விளக்கிக் கூறுவோம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

**நற்செய்திப் பணிக்குழுவின்**
**இணைய தளம்** www.arulchandrunilayam.org

மருத்துவர் தன்னிடம் வந்த நோயாளிக்கு கசப்பான மருந்து, மாத்திரைகளைக் கொடுக்கும்போதும், அறுவைச் சிகிச்சை செய்யும் போதும் நோயாளிக்கு மிகவும் வெறுப்பாகமிவும், வேதனையாகவும் இருக்கும். ஆனாலும், அவைகளே அந்த நோயாளிக்கு நல்ல ஆரோக்கியத்தை கொடுக்கப் போகிறவைகள் என்பதை மருத்துவர் அறிந்திருப்பதால், மருத்துவர் விருப்பப்படி அதை செய்கிறார். ஆக, மருத்துவர் பார்வையில் நன்மையாக தோன்றுவது, நோயாளி பார்வையில் நன்மையாக தோன்றுவதற்கு சற்று நேரம் ஆகும் அவ்வளவுதான். அதுபோல்தான் யாக்கோப்பின் மகன் யோசேப்பிற்கும் கசப்பான தீமைகளை ஆண்டவர் அனுமதித்தார். ஏனென்றால், அந்த தீமைகளைக் கொண்டு நன்மைகளைச் செய்வது ஆண்டவருடைய திட்டமாக இருக்கிறது (1பேது 1:7)

**அ)உண்மையுள்ள மனிதனுக்கு தீமைகள் ஏன் அனுமதிக்கப்படுகின்றன?**

கொல்லன் ஒரு இரும்புத்துண்டை நெருப்பிலே போடுகிறான். அதை சம்மட்டியால் அடிக்கிறான். நெருப்பின் தாக்கமும், சம்மட்டியின் தாக்குதலும் இரும்புக்கு எதிரான தீமைகள்தான். ஆனால் கொல்லன் அவைகளை அனுமதிப்பதன் மூலமாகத்தான் சாதாரண இரும்புத்துண்டை ஒரு சிறந்த கருவியாக மாற்றம் செய்ய முடிகிறது. அதுபோல, உண்மையுள்ளவரை சிறந்த பாத்திரமாக மாற்றவே, கடவுள் துன்பங்களை அனுமதிக்கிறார். ஆக நெருப்பாக வரும் துன்பமும், சம்மட்டியாக வரும் துயரமும் அவர்களை அழிக்க அல்ல, மேன்மையானவர்களாக உருவாக்கவே. நேர்மையாளருக்கு நேரிடும் தீமைகளை கொண்டு நன்மைகளை ஏற்படுத்துவதே இறைவனின் திட்டமாக இருக்கிறது. ஆகவே, எவைகளைத் தீமையாகப் பார்க்கின்றோமோ அவைகளை நன்மையாகப் பார்க்கும் காலம் வரும். ஆகவே, நமக்கு நிகழ்ந்த தீமைகள் யாவும் நமது நன்மைக்காகவே அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து இறைவனுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

'நன்மை செய்'. (லூக் 6:27)

**ஆ) உண்மையுள்ள மனிதருக்கு யாரும் தீமை செய்ய முடியாது.**

உண்மையாய் வாழ்ந்த யோசேப்பு தன் சொந்த சகோதரர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டு ஆழ்குழியில் போடப்பட்டார். அந்நிய நாட்டில் அடிமையாக விற்க்கப்பட்டு அனாதையாக்கப்பட்டார். போத்திபாரின் மனைவியால் அநியாயமாக பழிசுமத்தப்பட்டு அனேகர் நடுவில் அவமானப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் என்று திருவிவிலியத்தில் பார்க்கிறோம். அதாவது, மனிதர் பார்வையில் தீமையாகத் தோன்றும் பல செயல்கள் ஆண்டவருடைய பார்வையில் நன்மையாகவே உள்ளது (திவெ 2:10). யோசேபிற்கு நடந்தவைகள் யாவும் தீமைகள்தான். ஆனால், ஆண்டவருடைய பார்வையில் அவைகள் நன்மைகளே.

ஏனெனில் ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார் (தொநூ 39:2). இவ்வுலகத்தால் உண்மையுள்ளவர்கள் வெறுக்கப்படலாம், அனாதையாக்கப்படலாம், ஒதுக்கப்படலாம். ஆனால், ஆண்டவர் அவர்களோடு இருக்கின்றார். அவர்களை அரவணைக்கின்றார் (நீதி 12:22). ஆகவே அவர்கள் அனாதைகள் அல்ல. அவர்களுக்க எதிராக யாரும் தீமை செய்து விட முடியாது (திபா 58:11, உரோ 8:18).

**இ) உண்மையுள்ள மனிதருக்கு தீமைகள் யாவும் நன்மையாக மாறும்.**

யோசேப்பை இஸ்மயேலருக்கு அடிமையாக விற்றது ஒரு தீமை. ஆனால், அது தீமையல்ல. அதனால்தான், அவர் எகிப்துக்கு செல்லமுடிந்தது. எகிப்தில் அவரை உயர்த்துவது கடவுளின் திட்டம். இல்லையென்றால், அவர் கானானில்தான் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருப்பார். பார்வோனின் மெய்க்காப்பாளர் போத்திபாரின் மனைவி யோசேப்பின் மேல் அபாண்டமாக பழிசுமத்தி அவரை சிறையில் அடைக்கக் காரணமானது ஒரு தீமைதான். ஆனால், அது தீமையல்ல. அவர் சிறை சென்றதின் விளைவாகத்தான் எகிப்தின் அரண்மனையோடு தொடர்பு ஏற்பட வாய்ப்பு உருவானது. இல்லையென்றால், யோசேப்பு, போத்திபாரின் வீட்டிற்கு மட்டும் ஒரு நல்ல பணியாளராக இருந்திருப்பார்.

'தீமையை விட்டு விலகு ' (திபா 34:14)

யோசேப்பு சிறைச்சாலையில் கனவிற்கு விளக்கம் சொன்னபோது அரண்மனைப் பணியாளர் யோசேப்பு சொன்னபடியே விடுதலையாகியும் அதற்கு கைமாறு ஏதும் செய்யாதது வருத்தமான விசயம்தான். ஆயினும், அது வருத்தத்திற்குரியது அல்ல. ஏனென்றால், விடுதலைபெற்ற அரண்மனைப் பணியாளர் அன்று உதவி செய்திருந்தால் யோசேப்பு விடுதலையாகி சிறைக்கு வெளியே வந்திருக்கலாம். ஆனால், எகிப்தின் ஆளுனராக உயர்த்துவது இறைவனின் திட்டம். ஆகவே, எகிப்து ராஜாவின் கனவிற்கு விளக்கம் சொல்லும் சூழ்நிலை உருவாகும்வரை அவர் சிறையில் இருந்தால்தான் மன்னரின் நற்பெயரை பெற்று எகிப்தின் ஆளுனராக மாற வழி உருவாகும். ஆக, யோசேப்பிற்கு எவைகளெல்லாம் தீமைகளாக இருந்து அவரை வேதனைப்படுத்தியதோ, அவைகள்தான் யோசேப்பின் நன்மைகளுக்கு காரணமாய் இருந்தது. ஆகவேதான் தனக்கு நிகழ்ந்த தீமைகள் யாவும் ஆண்டவரால் அனுமதிக்கப்பட்ட நன்மைகள் என்பதை யோசேப்பு பின்பு உணர்ந்து கொண்டார். ஆகையால்தான், தம் சகோதரர்களிடம் நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள் ஆனால், கடவுள் அதை நன்மையாக மாற்றிவிட்டார் (தொநூ.50:20) என்கிறார்.

**ஈ.) உண்மையுள்ள மனிதர் நன்மைகள் பல பெறுவார்.**

உண்மையுள்ள மனிதருக்கு தீமைகள் எப்படி வந்தாலும், யார் மூலம் வந்தாலும் ஆண்டவர் அவர்களோடு இருப்பதால் அனைத்தும் நன்மையாக மாறும்.

அவர்களுக்கு வரும் தீமைகள் யாவும் தீமைகள் அல்ல. தீமைகள் வடிவில் வந்த நன்மைகளே! ஏனெனில், கடவுளால் எல்லாம் இயலும். ஆகவே, உன் கடவுளாகிய ஆண்டவருக்கு நீ முற்றிலும் உண்மையாய் இரு (இச 18:13, நீதி 28:20). கடவுள் உங்களை எல்லா நலன்களிலும் நிரப்ப வல்லவர். எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்குத் தருவார். அனைத்து நற்செயல்களையும் செய்யத் தேவையாதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார் (2கொரி 9:8, 1பேது 5:10) ஆகவே துன்பத் தீயில் நீங்கள் சோதிக்கப்படும் போது ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள். கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள் (1பேது 4:12,13).

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

## அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள் அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்' (எபே6:16).

உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ நம் ஒவ்வொருவருக்கும் துணையாக இருப்பது நமது இறை நம்பிக்கை. இறை நம்பிக்கையில் நிலைத்து நிற்பதற்கு நமக்கு தேவையான ஆதாரமாக இருப்பது இறை அனுபவம்தான். புனித பவுல் கூறுவது போல நம் வாழ்வில் எதையும் சந்திக்கும் போதும், கடந்து வரும்போதும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொண்டிருந்தால்தான் நாம் வீழ்ந்து விடாமல் காப்பாற்றப்படுவோம். அதை வலியுறுத்தி தான்'எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்' (எபே6:16) என்று அழுத்தமாகக் கூறுகின்றார்.

இறை அனுபவத்தைச் சுவைத்து வாழும் நம்பிக்கையாளர்கள் எதற்கும், யாருக்கும் அஞ்சமாட்டார்கள். 'எதுவரை இம்மக்கள் என்னை இழிவுபடுத்துவார்கள் நான் அவர்களுக்கு அடையாளங்கள் தந்தும் எதுவரை அவர்கள் என்னில் நம்பிக்கை கொள்ளாதிருப்பார்கள்?' (எண் 14:11) என்று மோசேயிடம் ஆண்டவர் பேசுகிறார். நாம் நம்பிக்கை இல்லாமல் வாழும் பொழுது ஆண்டவரை இழிவு படுத்துவதாக ஆண்டவரே கூறுகின்றார். நான் அவர்களுக்கு அடையாளங்கள் தந்தும் எதுவரை இவர்கள் என்னில் நம்பிக்கை கொள்ளாதிருப்பார்கள் என்ற வார்த்தையின் வழியாக ஆண்டவரின் ஏக்கத்தையும், ஆதங்கத்தையும் நாம் புரிந்து கொள்ள முடிகின்றது. இன்றைக்கும் நம் வாழ்வில் ஆண்டவர் எத்தனை விதமான வியக்கத்தக்க காரியங்களை நம் தனிப்பட்ட வாழ்விலும், நம் குடும்பத்திலும், நமக்கு அன்பானவர்கள் வாழ்விலும் செய்திருக்கின்றார் என்பதை

நினைவுப்படுத்திப் பார்ப்போம். இத்தனை நன்மைகளையும் அடையாளங்களையும் நாம் பெற்றிருந்தும் நம்பிக்கையற்று வாழும் போது நாமும் ஆண்டவர் பார்வையில் அவரை இழி படுத்துகிறோம் அல்லவா?

'உமது பெயரை அறிந்தோர் உம்மில் நம்பிக்கை கொள்வர்; ஆண்டவரே, உம்மை நாடி வருவோரை நீர் கைவிடுவதில்லை' (திபா9:10). ஆண்டவர் பெயரை அறிந்துள்ள நம் அனைவருக்கும் இருக்க வேண்டிய ஒரே தகுதி நம்பிக்கைதான். நம்பிக்கை கொண்டு அவரைத் தேடி வரும் யாரையும் அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் ஆண்டவர் அவர்களைப் புறக்கணிப்பதும் இல்லை; கைவிடுவதுமில்லை.' அவர்கள் என் மீது அன்பு கூர்ந்ததால் அவர்களை விடுவிப்பேன் அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால் அவர்களைப் பாதுகாப்பேன்' ( திபா 91:14) யாரெல்லாம் இயேசுவை ஆண்டவராகவும், மீட்பராகவும் அறிந்து உள்ளூர அனுபவிக்கின்றோமோ அவர்கள் அனைவரையும் ஆண்டவரும் அறிந்துள்ளார். எனவே, அவர்களை எல்லாத் தீங்கினின்றும் விடுவிக்கின்றார், பாதுகாக்கின்றார். தொடக்க நூலில் ஆகார் நம்பிக்கை அறிக்கை செய்வதை நாம் பார்க்கின்றோம். 'என்னைக் காண்பவரை நானும் இங்கே கண்டேன் அல்லவா? என்று அவள் சொல்லித் தன்னுடன் பேசிய ஆண்டவரை 'காண்கின்ற இறைவன் நீர்'என்று பெயரிட்டு அழைத்தாள்' (தொநூ16:13). எவ்வளவு ஆழமான நம்பிக்கை அறிக்கை. ஆண்டவர் எப்போதும் நம்மைக் காண்கிறவராகவே இருக்கின்றார். அவரில் ஆழமான நம்பிக்கை கொண்டவர்களால் மட்டுமே அவரைக் காண முடியும். அப்போதுதான் ஆகாரைப் போல் நாமும் அறிக்கையிட முடியும்.

நற்செய்திப் பணியாளராக அழைக்கப்பட்ட பின்பும், செப வாழ்விற்கு நம்மைப் பழக்கப்படுத்திக் கொண்ட பின்பும் நாம் எதற்கெடுத்தாலும் பயப்படுகிறவர்களாகவே இருக்கின்றோம். எதிர்காலத்தைக் குறித்த பயம், பிள்ளைகளைக் குறித்த பயம், பயணம் செய்யும்போது பயம், சில மனிதர்களைக் கண்டு பயம், சூழ்நிலைகளைக் கண்டு பயம், இதற்கெல்லாம் உச்சமாக நமது மரணத்தை எண்ணிப் பயம். இப்படி எதற்கெடுத்தாலும் பயந்து நம் வாழ்க்கையின் மகிழ்ச்சி காலங்களைத் தொலைத்து விட்டு நிம்மதியின்றி இருக்கின்றோம். எசாயா இறைவாக்கினர் கூறியிருப்பது போல 'நம்பிக்கை கொண்டவர்கள் பதற்றமடைய மாட்டார்கள்' (எசா28:10) நம்பிக்கையில்லாமையால் நமது நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தொலைப்பது மட்டுமின்றி நம்மைச் சார்ந்துள்ள மற்றவர்களின் நிம்மதியையும் அமைதியையும் மகிழ்ச்சியும் தொலைத்து விடுவதற்கு காரணமாக மாறிவிடுகின்றோம்.

நானும் இந்தத் தொடரை ஆரம்பிக்கும் முன்பு நம்பிக்கையில் குறைவுபட்டுத்தான் இருந்தேன். நம்பிக்கை அடுத்து தொடங்க வேண்டுமே அதற்கான தகுதி நமக்கு இல்லையே என்று தனி செபத்தில் பல முறை அழுதிருக்கிறேன். தொடர்ந்து தூய ஆவியானவரிடம் செபிக்க ஆரம்பித்தேன். தூய ஆவியானவரே நம்பிக்கை பற்றி நான் எழுதத் தொடங்கும் முன்பே என்னைத் தகுதியாக்கும் என்று செபித்தேன். தூய ஆவியானவரும் என்னை வழிநடத்தியிருக்கின்றார். நம்பிக்கையில் உறுதிப்படுத்தியிருக்கின்றார். அதற்குச் சான்றாகப் பலவற்றைக் கூறமுடியும். என்னை நம்பிக்கையில் உறுதிப்படுத்திய ஆவியானவர் உங்களையும் வழிநடத்துவார். உறுதிப்படுத்துவார். ஏனென்றால் பணியாளர் வாழ்விற்கு அடித்தளமே நம்பிக்கைதான்.

'நம்மை நம்பியிருப்போருக்காகச் செயலாற்றும் கடவுள் உம்மையன்றி வேறு யார்? (எசா64:4) எல்லாவற்றிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவரை மட்டுமே நம்பியிருந்தோமென்றால் கடவுள் நமக்காகச் செயலாற்றுவார். இதை திருவிவிலிய மாந்தர்களும் புனிதர்களும் வாழ்ந்து காட்டியிருக்கின்றார்கள். ஆண்டவரும் அவர்கள் அவரை நம்பியதால் வியத்தகு முறையில் அறிவியலுக்கும் மருத்துவத்திற்கும் அப்பாற்பட்ட நிகழ்வுகளையும் காரியங்களையும் ஆண்டவர் நிகழ்த்தியிருக்கிறார். நம் சார்பாக கடவுளின் திருமுன் நிற்கின்ற இயேசு ஆண்டவர் (எபி 9:24) நம் வாழ்விலும், வியத்தகு நம்ப முடியாத காரியங்களை நிறைவேற்றுவார். இறை நம்பிக்கைதான் பணியாளர் வாழ்வின் அடித்தளம்.

நற்பணி **ச.சகாயராணி,**
இராம்நகர்.

## கருவூலமாகும் இறைவார்த்தை

உலகில் மிக அதிகமானவர்கள் வாசிப்பதும் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதும், எத்தனையோ பேர்களை ஈர்த்து தன் வயப்படுத்தியதுமான சிறந்த ஆற்றல் மிகுந்த நூல் திருவிவிலியம்.

இறைவார்த்தை எண்ணற்றவர்களை இயேசுவிடம் அழைத்துச் சென்றுள்ளது. பலர் புனிதராக மாறி இருக்கின்றனர். 'மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?' (மத் 16:26). இந்த இறைவார்த்தை தான் கல்லூரிப் பேராசிரியரும் செல்வச் செழுமையில் வாழ்ந்தவருமான புனித பிரான்சிஸ் சவேரியாரை மனமாற்றம் அடையச் செய்தது.

இரவு முடியப் போகிறது. பகல் நெருங்கிவிட்டது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து விட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக. பகலில் நடப்பது போல மதிப்போடு நடந்து கொள்வோமாக (உரோ 13:12-13). இந்த வார்த்தைகளே ஊனியல்பிற்கு ஏற்ப பாவங்கள் மூழ்கி, அறிவுச் செருக்கில் வாழ்ந்த அகுஸ்தீனாரை மனம் மாற்றியது. இறைவாக்கு வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றது (யோவா 6:63). நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கனவே தூய்மையாய் இருக்கின்றீர்கள். (யோவா 15:3) ஆகையால் இறைவார்த்தைகளைப் பற்றிக் கொள்வோம். அவ்வார்த்தை தரும் வாக்குறுதிகளில் நம்பிக்கைக் கொண்டு வாழ்வோம்.

ஒரு மனிதர் வாழ்க்கையில் முன்னேற இயலவில்லை. அவரது வாழ்க்கை முழுவதும் தோல்வியே சந்தித்து வந்தார். வாணிபம் செய்தார் பொருளை இழந்தார். வழக்கறிஞர் தொழிலும் தோல்வி. மனைவியால் மகிழ்ச்சியடையலாம் என திருமணம் செய்து கொண்டார். ஆனால் மனைவியோ கடும் கோபக்காரியாக இருந்தார். அரசியலில் நுழைந்தார் அதிலும் தோல்வி. துன்பமான பலச் சூழ்நிலைகளிலும் திருவிவிலியம் வாசிக்க துவங்கினார். திருப்பாடல் 34ஐ அடிக்கடி நம்பிக்கையுடன் வாசித்தார். தனது 62வது வயதில் உலகிலேயே மிக உயர்ந்த பதவியாகிய அமெரிக்காவின் அதிபராக அவரை இறைவன் உயர்த்தினார். 'இறைவார்த்தை ஒரு போதும் நிறைவேறாமல் இராது' (உரோ 9:6) 'மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச் செய்து விதைப்பவனுக்குவிதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். இது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக அதை நான் அனுப்பினேனோ அதை வெற்றிக்கரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை (எசா 55:10-11).

'இயேசு கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார் (1 கொ 1:24) அவரே வாக்குமாய் உள்ளார். எனவே இறைவார்த்தை வல்லமை உடையது. இறைவார்த்தையை வாசித்து தியானித்து வாழ்வாக்குவதன் மூலம் கடவுளின் இனிமையையும் அனுபவிக்கலாம். எனவே தான் திருப்பாடல் ஆசிரியர் 'உம் சொற்கள் என் நாவுக்கு எத்துணை இனிமையானவை. என் வாய்க்குத் தேனினும் இனிமையானவை (திபா 119:103) என்கிறார்.

இதையே எரேமியா இறைவாக்கினர் 'நான் உம் சொற்களைக் கண்டடைந்தேன் அவற்றை உட்கொண்டேன். உம் சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன. என் உள்ளத்திற்கு உவகை அளித்தன. ஏனெனில்

படைகளின் ஆண்டவரே உம் பெயரே எனக்கு வழங்கலாயிற்று (எரே 15:16) என்கிறார்.

விவிலியம் படிக்கும்போது இறைவன் வார்த்தை வழியாக நம்மிடம் பேசுகிறார். இறைவன் நம்மிடம் பேசும் வார்த்தை மிக விலை உயர்ந்த புதையலாகும். அவ்வார்த்தை நம்மைக் கண்டிக்கிறது. திருத்துகிறது பாவத்தைக் குறித்த அறிவினைத் தருகிறது. கற்பிக்கிறது ஆறுதல் கூறுகிறது. நலம் அளிக்கிறது காத்திருக்கச் செய்கிறது. தக்க வேளையில் உயர்த்துகிறது. ஆகையால் புதையலைப் போன்ற இறை வசனங்களை உள்ளத்தில் வைத்துக்கொள்வோம். இதுவே நமது ஆன்மாவின் கருவூலம்.

நற்பணி. **V. செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை.

# தவம்

கடவுளை அணுகிச் செல்லுங்கள் அவரும் உங்களை அணுகி வருவார். (யாக் 4:8).

நமது உடல் மண்ணாலும் அதே சமயம் கடவுளின் உயிர் மூச்சாலும் ஆனது (தொநூ 2:7). நமது உடல் இந்த பூமியைச் சார்ந்ததாக இருப்பதால் நமது ஊனியல்பு நம்மை பாவத்தின் பக்கம் இழுக்கிறது. அதே சமயம் நமக்குள் இருக்கும் கடவுளின் ஆவியார் நம்மை அந்த பாவத்தில் இருந்து விடுலை பெற உதவுகிறார். ஊனியல்பின் இச்சை தூய ஆவியாருக்கு முரணானது. தூய ஆவியாரின் விருப்பம் ஊனியல்புக்கு முரணானது. இவை ஒன்றுக்கொன்று எதிராய் உள்ளதால் நீங்கள் செய்ய விரும்புவதை உங்களால் செய்ய முடிவதில்லை (கலா 5:17). அன்றாட வாழ்வில் வேலைகளுக்கு நடுவே இறைவனை நினைத்தால் அது தியானம். அன்றாடம் இறைவனுடைய நினைவிலேயே முழுவதும் வாழந்து சிறிது நேரம் வாழ்வை பற்றி சிந்தித்தால் அது தவம். தவம் என்பது இறைவனோடு நெருங்கி நடப்பதற்காக மனதை ஒழுங்குபடுத்தும் ஒரு ஆன்மீகப் பயிற்சியாகும். இந்த பயிற்சியின் அங்கமாக செபமும், தனிமையும் உள்ளன.

உலகம் முழுவதும் பாவம் நிறைந்துள்ளது. அதில் நாம் மூழ்காமல் இருந்தால்தான் நாம் போய் சேரவேண்டிய வான்வீட்டை அடையமுடியும். அந்த பயணத்துக்கு பயன்படும் வாழ்க்கை எனும் படகை சீர்படுத்துவதே தவம். கடவுள் எங்கு இருக்கிறார்? அவர் நமக்குள் இருக்கிறார். (1 கொரி 6:19) அவர் வாழும் ஆலயத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள உதவுவது தவம்.

**1. உலக ஆசை:** அனைத்து ஆசைகளுக்கும் அடிப்படையாக இருப்பன

மூன்று. இதில் ஏதாவது ஒன்றை மனிதனுக்கு அலகை கொடுத்து அல்லது எடுத்து கடவுளிடமிருந்து இருந்து பிரித்து விடுகின்றான்.

**அ. மண்** : மண்ணில் சிந்திய இரத்தத்தில் 90 சதவீதம் இந்த மண்ணுக்காக சிந்தப்பட்டதாகத்தான் இருக்கும். வயல்வெளிகள் மீது ஆசை கொண்டு, அவற்றைப் பறித்துக் கொள்கின்றார்கள். வீடுகள் மேல் இச்சை கொண்டு அவற்றைக் கைப்பற்றிக் கொள்கின்றார்கள் (மீக்கா 2:2). எனவே தான் எசாயா இறைவாக்கினர் வீட்டோடு வீடு சேர்ப்பவர்களே, வயலோடு வயல் இணைத்துக் கொள்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு (எசாயா 5:8) என்று கூறுகிறார். நமக்கெல்லாம் நாபோத்தின் திராட்சைத் தோட்டம் (1 அரசர்கள் 21) நிகழ்வு தெரியும் அல்லவா?. அனால் வந்தது இறப்பும் சாபமுமே. எனவே விழிப்பாய் இருப்போம்.

**ஆ. பொன்:**

பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்து திரிந்து பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள் மேல் வருவித்துக் கொள்கிறார்கள். (1 திமொ 6:9-10) பொருள் ஆசையினால் கடவுளுக்கு முதலிடம் கொடுக்காமல் பணம் தேடுவதற்கு முதலிடம் கொடுக்கின்றார்கள். பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில், 'நான் ஒரு போதும் உன்னைக் கைவிடமாட்டேன். (எபி 11-13:4) நம்மை சில சமயம் சாத்தான் பொருளைக் கொடுத்தும் கடவுளைத் தேடவிடாமல் செய்து விடுவான் எனவேதான் தவத்திற்கு பொருளாசை எதிராக இருக்கிறது.

**இ. பெண் :** சாத்தான் கடைசியாக பயன்படுத்தும் அணு ஆயுதம் போன்றது இந்த ஆசை. எதிர்பாலினம் என்பதே மிகச் சரியான சொல்லாடல். நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்தால், சாகத்தான் போகிறீர்கள். ஆனால் தூய ஆவியின் துணையால் உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால் நீங்கள் வாழ்வீர்கள் (உரோ 8:13). ஊனியல்பால் தீயன செய்யாமல் இருப்பது தவத்தின் பகுதியாகும். திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள். மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும். காமுகரும் விபசாரத்தில் ஈடுபடுவோரும் கடவுளின் தீர்ப்புக்கு ஆளாவர் (எபி 12:14). கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே,உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள். (1 கொரி 6:20) என்கிறார் புனித பவுல்.

**2. ஒறுத்தல் :** ஒறுத்தல் என்பது நமக்கு விருப்பமானதை தவிர்த்தல் என்று கொள்ளலாம். இதை அவரவர் விருப்பத்தைப் பொருத்து பல்வேறாக

பிரிக்கலாம் என்றாலும் இதில் முக்கியமானது உணவு கட்டுப்பாடு ஆகும்.

**உணவு :** தவத்தில் உணவு தவிர்த்தல் மிகவும் அத்தியாவசியமானது. உணவே மருந்து என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். உணவு மனிதனின் உடலையும் மனதையும் மாற்றவல்லது என்றும் உடல் வளர்ச்சியடையும் போது ஆன்மா வளர்ச்சி அடைவதில்லை. ஏனென்றால் மனிதன் தன் உடல் பலத்தையே நம்பி இருப்பான் ஆன்ம பலத்தை உயர்வாக நினைக்க உடல் பலத்தை முதன்மைப்படுத்தக் கூடாது. இது உடலைக் கவனிக்காமல் இருக்க வேண்டும் என்று பொருளல்ல.. யோசேப்பிற்கு கொடுக்கப்பட்ட உணவுக்கு பதிலாக அவர் வேறு உணவு எடுத்தாலும் மற்றவர்களை விட அவர் பலர் உள்ளவராக இருந்தார். மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல . மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் (மத் 4:4). தவத்தால் நம்மை தூய்மையாக்கி கடவுளை அணுகிச் செல்வோம்.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்.

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



மனம் வருந்தி உம்மிடம் ஒப்புரவாகவும், உம்மையே பிரதிபலிக்கவும் ஒரு காலத்தைத் தந்தவரே இறைவா!

மன்னிக்க முடியாத என் குற்றங்களை நீர் மன்னித்ததால், நான் பிறரை மன்னிக்கவும், இரக்கம் பெறத் தகுதியில்லாத என்னிடம் நீர் இரக்கம் காட்டியதால், நான் பிறரிடம் இரக்கம் காட்டவும்,பார்க்கும் மனிதரிடமெல்லாம் உம்மைக் கண்டு அவர்களை அன்பு செய்யவும் வேண்டிய மன நிலை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன்.

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

கிறிஸ்துவே நம் மையம்.
அவரிடமிருந்து திசை திருப்புபவைகளை விட்டு விடுவோம்.
அவரிடம் நம்மை ஈர்ப்பவைகளிடம் கவனம் செலுத்துவோம்.

-எல்லாரோ

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக!...... உரோ 12:2

| **வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்** | |
|---|---|
| ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே மாட்சியும் பெருமையுமாகும்; அதுவே மகிழ்ச்சியும் அக்களிப்பின் மணிமுடியுமாகும். | **சீராக்கின் ஞானம் 1:11** |

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01.3.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | பரமக்குடி, காளையார்கோவில்<br>புதுக்கோட்டை, கோட்டைக்காடு |
| 03.3.26 | தவக்காலத் தியானம் | ஆண்டாவூரணி |
| 04.3.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலஅன்னை அமைதியகம், காயாவயல்.<br>அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 06.3.26 | தவக்காலத் தியானம் | TELC, பரமக்குடி |
| 07.3.26 | தவக்காலத் தியானம் | காளையார்கோவில் |
| 08.3.26 | தவக்காலத் தியானம் | கோட்டையூர் |
| 07.3.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம்,<br>இடைக்காட்டூர் |
| 07.3.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில்,<br>தங்கச்சிமடம் |
| 08.03.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில்,<br>இராமநாதபுரம்<br>வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை<br>புனித அருளானந்தர் கோவில், ஓரியூர்<br>உலக இரட்சகர் கோவில், பட்டுக்கோட்டை<br>புனித மரியன்னை கோவில், பூதலூர் |
| 15.3.26 | தவக்காலத் தியானம் | சம்பை |
| 15.3.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம், காயாவயல்.<br>புனித ஆரோக்கிய அன்னை ஆலயம், சாயல்குடி<br>புனித பேதுரு கோவில், சி.கே. மங்கலம்<br>புனித அடைக்கல அன்னை கோவில், திருமயம்<br>புனித லூர்தன்னை கோவில்.அம்மாபேட்டை |
| 20.3.26 | தவக்காலத் தியானம் | தூத்துக்குடி |
| 22.3.26 | தவக்காலத் தியானம் | ஏ.ஆர்.மங்கலம் |
| 22.03.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித பாத்திமா அன்னை கோவில், திருவாரூர் |
| | | குழந்தை இயேசு கோவில், நமணசமுத்திரம்<br>தூய ஆவியார் கோவில்,<br>இராஜசிங்கமங்கலம் |
| 27.28 மார்ச் 26 | தவக்கால களப்பணித் திறனாய்வு | அமைதியகம் |

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 01.03.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 01.03.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி J. அருள்இளங்கோ<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 07.03.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி |
| 08.03.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி பெ. தெரசா மிரண்டா |
| 08.03.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சேவியர்<br>நற்பணி A. பிரான்சிஸ்சேவியர் |
| 08.03.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி M. விசுவாசம்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 15.03.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி P.அமலோற்பவஆரோக்கியராணி |
| 15.03.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி J. ரபேக்கா<br>நற்பணி J. சார்லஸ் |
| 15.03.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி A. சகாய தமிழ்செல்வி |
| 22.03.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி A. அந்தோணி பிரகாஷ்<br>நற்பணி S. தைனஸ்மேரி |

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 01.03.26<br>I | திரு இருதய ஆண்டவர் கோவில். புதுக்கோட்டை | நற்பணி A. சகாயராஜா<br>943569152<br>நற்பணி S. சகாயராணி<br>9047495319 |
| 01.03.26<br>I | புனித சூசையப்பர் கோவில் கோட்டைக்காடு | நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600<br>செயலர்<br>9787967272 |
| 08.03.26<br>II | புனித மரியன்னை கோவில் பூதலூர் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>6379405762<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206 |
| 08.03.26<br>II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>9787791869<br>நற்பணி S. பால்ராஜ்<br>9789077287 |
| 15.03.26<br>III | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206<br>நற்பணி தை. அமல்ராஜா<br>9443983519 |
| 15.03.26<br>III | அடைக்கல மாதா கோவில் திருமயம் | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>9787037717 |
| 22.03.26<br>IV | புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர் | நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600<br>நற்பணி தை. அமல்ராஜா<br>9443983519 |
| 22.03.26<br>IV | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி GMS. ராணி<br>9655264448<br>நற்பணி S. பால்ராஜ்<br>9789077287 |

# புனித பிளாசியுஸ் (பிப்ரவரி 03)



'அறிவுத்திறன் கொண்டோருக்கு நற்பயிற்சி பொன் நகையாகும்' வலக்கையில் அணிந்த கைவளையலாகும்' (சீஞா 21:21)

ரூபெர்ட் ஆஸ்டிரியா நாட்டில் சால்ஸ்பர்க் எனும் ஊரில் கி.பி 660ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் அறிவில் சிறந்தவர், தவ முயற்சிகளில் தலைசிறந்தவர். கொடுப்பதில் வல்லவர்.

ரூபெர்ட் குணமளிக்கும் வல்லமையைப் பெற்றிருந்தார். அதனால் நிறையப் பேர் இவரிடத்தில் வந்து குணம்பெற்றுச் சென்றார்கள். இவரிடத்தில் இருந்த அறிவுத் திறன், ஆளுமைத் திறன் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு இவரை வோர்ம்ஸ் நகர ஆயராக ஏற்படுத்தினார்கள். ஆயராக உயர்ந்த பின்பு ரூபெர்ட் அற்புதமான பணிகளைச் செய்தார். குறிப்பாக நற்செய்தி அறிவிப்புக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து வந்தார். சில காலம் வோர்ம்ஸ் நகர ஆயராக இருந்துவிட்டு, பவேரியாவுக்கு நற்செய்தி அறிவிக்கச் சென்றார். பவேரியாவில் இவர் ஆற்றிய நற்செய்திப் பணிக்கு மிகுந்த பலன் கிடைத்தது. அங்கு மன்னனாக இருந்தவர் ரூபெர்டின் போதனையால் தொடப்பட்டு மனமாறி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து நிறையப் பேர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவினர்.

பவேரியாவில் நற்செய்திப் பணி ஆற்றிவிட்டு ரூபெர்ட், ஜுவாவும் (சார்ல்ஸ்பர்க்) என்ற இடத்திற்குச் சென்றார். அங்கேயும் ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை மிகச் சிறப்பான முறையில் அறிவித்து, நிறையப் பேரை இயேசுவுக்குள் கொண்டு வந்தார். இப்படி இடையறாது நற்செய்திப் பணி செய்து வந்த ரூபெர்ட், கி.பி 710 ஆம் ஆண்டு உயிர்ப்புப் பெருவிழா அன்று இறைவனடி சேர்ந்தார். நற்செய்தி அறிவிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

நற்செய்தியில், ஆண்டவர் இயேசு விண்ணேற்றம் அடைகின்றபோது தம்முடைய சீடர்களைப் பார்த்து சொன்ன வார்த்தை, 'உலகெங்கும் சென்று, படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்' (மாற் 16: 15).

ஆகவே, தூய ரூபெர்ட்டின் நினைவைக் கொண்டாடும் நாம், அவரைப் போன்று ஆண்டவரின் நற்செய்தியை ஆர்வத்தோடு எடுத்துரைப்போம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.




கடந்த பகுதியில் முதல் மூன்று உளவியல் ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) பற்றி சுருக்கமாக பார்த்தோம். இப்பகுதில் நான்காம் நுண் திறனான சுருக்கமாகக் கூறுதல் (Summarizing) பற்றி பார்ப்போம். உளவியல் ஆலோசகரின் நுண் திறன்களில் சுருக்கமாகக் கூறுதல் (Summarizing) ஒரு முக்கியமான திறமையாகும். இது வாடிக்கையாளர் (Client) அமர்வின் போது வெளிப்படுத்திய முக்கியமான எண்ணங்கள், உணர்வுகள், பிரச்சினைகளின் கருப்பொருள்கள் மற்றும் முக்கியத் தகவல்களைச் சுருக்கி, அதை வாடிக்கையாளருக்குத் திரும்பச் சொல்லும் ஒரு நுட்பமாகும்.சுருக்கமாகக் கூறுதலின் முக்கிய அம்சங்களும் நோக்கங்களும் பற்றி இப்பகுதியில் பார்ப்போம்.

**1. வாடிக்கையாளரை முழுமையாகப் புரிந்துகொள்ளுதல்** (To Confirm Understanding) ஆலோசகர் வாடிக்கையாளர் சொன்ன அனைத்தையும், குறிப்பாக உணர்ச்சி ரீதியான விஷயங்களையும், அதன் மையப் பொருளையும் (Core Theme) சரியாகப் புரிந்துகொண்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள இந்தத் திறன் உதவுகிறது. வாடிக்கையாளரிடம் சுருக்கத்தைக் கூறுவதன் மூலம், 'நான் இதைத்தான் புரிந்துகொண்டுள்ளேன். இது சரியா?' என்று கேட்பதற்கு சமமாகும்.

**2. அமர்வின் போக்கைக் கட்டமைத்தல்** (Structuring the Session) வாடிக்கையாளர் பலவிதமான தகவல்களை ஒழுங்கற்ற முறையில் பேசும்போது, சுருக்கமாகக் கூறுதல் அவர்களின் சிதறிய எண்ணங்களையும் உணர்வுகளையும் ஒழுங்குபடுத்தி, முக்கியப் புள்ளிகளில் கவனம் செலுத்த உதவுகிறது.

• **அமர்வின் தொடக்கத்தில்:** முந்தைய அமர்வின் முக்கியக் கருப்பொருளை நினைவூட்ட, சுருக்கமாகக் கூறலாம்.

•**அமர்வின் நடுவில்:** ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது ஒரு பகுதியின் முடிவில், இதுவரை பேசப்பட்ட முக்கிய விஷயங்களை மீண்டும் ஒருமுறை தொகுத்து, அடுத்த தலைப்புக்குச் செல்ல இது ஒரு பாலமாக அமைகிறது.

•**அமர்வின் முடிவில்:** அமர்வு முழுவதிலும் கற்றுக்கொண்ட அல்லது விவாதிக்கப்பட்ட முக்கிய நுண்ணறிவுகள் (ஹுஜவிஷ்ஆஜுமிவி), தீர்மானங்கள் மற்றும் அடுத்த படிகளை வாடிக்கையாளர் எடுத்துச் செல்ல உதவும் வகையில் ஒட்டுமொத்தமாகச் சுருக்கிக் கூறலாம்.

**3. வாடிக்கையாளருக்கு தெளிவு வழங்குதல்** (Providing Clarity)

வாடிக்கையாளர்கள் தங்கள் பிரச்சினைகளை மிகவும் சிக்கலானதாகவும், தெளிவற்றதாகவும் உணரலாம். ஆலோசகர் அவற்றைச் சுருக்கிக் கூறும்போது, தங்கள் பிரச்சினையின் சாராம்சத்தை (Essence) ஒரு 'ஒழுங்கான பொதி' (Neat package) போலக் காண அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. இது வாடிக்கையாளர் தங்கள் நிலைமையைப் பெரிய கண்ணோட்டத்தில் பார்க்கவும், தெளிவு பெறவும் உதவுகிறது.

**4. சிகிச்சை உறவைப் பலப்படுத்துதல் (**Strengthening the Therapeutic Alliance)

ஆலோசகர் சுருக்கமாகக் கூறுவதன் மூலம், வாடிக்கையாளரின் பேச்சில் தான் முழுமையாகக் கவனம் செலுத்துகிறேன், அவர்களை மதிக்கிறேன் என்று உணர்த்துகிறார். இது வாடிக்கையாளருக்கும் ஆலோசகருக்கும் இடையே நம்பிக்கை மற்றும் இணக்கமான உறவை (Rapport and Trust) வளர்க்க உதவுகிறது. வாடிக்கையாளர் தான் புரிந்துகொள்ளப்பட்டதாகவும், கேட்கப்பட்டதாகவும் உணர்கிறார்கள்.

**5. முன்னோக்கிச் செல்லத் தூண்டுதல்** (Moving the Process Forward)

ஒரு சுருக்கத்தைக் கூறிய பிறகு, வாடிக்கையாளரிடம், 'இது சரியா? இதில் ஏதாவது விடுபட்டிருக்கிறதா? இப்போது எதில் கவனம் செலுத்த விரும்புகிறீர்கள்?' என்று கேட்கலாம். இது வாடிக்கையாளரை அமர்வை முன்னோக்கி நகர்த்தவும், ஆழமான சுய ஆய்வுக்கு (Self-exploration) தயாராக இருக்கவும் தூண்டுகிறது.

**சுருக்கமாகக் கூறுவதைச் சரியாகப் பயன்படுத்த சில வழிகள்:**

1. **சரியான நேரத்தைத் தேர்ந்தெடுங்கள்:** வாடிக்கையாளர் நீண்ட நேரம் பேசிய பிறகு அல்லது ஒரு முக்கிய உணர்வுபூர்வமான கருத்தைப் பகிர்ந்து கொண்ட பிறகு பயன்படுத்தலாம்.

2. **வாடிக்கையாளரின் சொற்களைப் பயன்படுத்துங்கள்:** வாடிக்கையாளர் பயன்படுத்திய முக்கிய வார்த்தைகள் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகளை உங்கள் சுருக்கத்தில் சேர்ப்பது, உங்கள் புரிதலின் துல்லியத்தை அதிகரிக்கும்.

3. **சுருக்கமாகவும் தெளிவாகவும் இருங்கள்:** தேவையில்லாத விவரங்களைத் தவிர்த்து, மையக் கருப்பொருட்களை மட்டுமே சுருக்கிச் சொல்லுங்கள்.

4. **சரிபார்ப்பு கேள்வியுடன் முடிக்கவும்:** எப்போதும், 'நான் சொன்னது சரியாகப் புரிந்ததா?' அல்லது 'இதில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா?' போன்ற கேள்வியுடன் முடிப்பது வாடிக்கையாளரின் திருத்தங்கள் அல்லது கூடுதலான விளக்கங்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

சுருக்கமாகக் கூறுதல் என்பது வெறும் தகவலைத் திரும்பச் சொல்வது அல்ல; வாடிக்கையாளரின் அனுபவங்களின் மையப் பொருளைப் பிடித்து, அவர்களுக்குத் திருப்பி அளித்து, அடுத்தகட்ட முன்னேற்றத்திற்குத் தயார்ப்படுத்தும் ஒரு நுட்பமான, இரக்கமுள்ள செயல்பாடு ஆகும்.

**அசை போட அரை நிமிடம் :**

"சுருக்கமாக கூறும் திறன் நமது கவனத்தை கூர்மையாகும்"

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## இது சாத்தியமா ?

கடந்த மாதம் என் அம்மாவின் இவ்வுலகப்பிரிவு என்னை ஆழ்ந்த வருத்தத்திற்கு உள்ளாக்கியது. மனம் கசிந்து அழுதேன். நெருங்கிய உறவினர்களையும், பாசத்திற்குரிய பணிக்குடும்ப உறுப்பினர்களையும் கண்டு தோளில் சாய்ந்து அழுதேன். விம்மி விம்மி அழுதேன். வீட்டிற்குள் தனியாக வந்த போதும், பேருந்து பயணங்களிலும் அம்மாவின் நினைவலைகள் வந்தபோது, நெஞ்சம் கனக்க, அழுகை நின்றபாடு இல்லை.

எனக்குள்ளே எழுந்த ஒரு சில கேள்விகள் அவ்வப்போது என்னை திணற வைத்தது. என் நெஞ்சத்திற்கு உள்ளாய் எழுந்த அந்த கேள்விகள்: அம்மாவின் பிரிவை நினைத்து இவ்வளவு அழுகிறாயே! உலக மாந்தரின் பாவத்தால், ஆண்டவரின் நெஞ்சம் எவ்வளவு கனத்திருக்கிறது! உலக மாந்தரின் மனம் மாறாத்தன்மை குறித்து ஆண்டவர் எந்த அளவுக்கு கவலை கொண்டுள்ளார்! அதற்காக என்றாவது ஒருநாள் கண்ணீர் சிந்தியிருக்கிறாயா?

'அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்' (1 பேது.5:7). நானே எனது கவலையை சற்று ஓரமாய் வைத்துவிட்டு ஆண்டவர் கவலையைப்பற்றி சற்று சிந்திக்கத் தொடங்கியிருக்கிறேனென்றால், உங்களுக்கும் அது சாத்தியம் தானே!

-நற்பணி **J. அருள் இளங்கோ,** இராம் நகர்.

## என்னை மன்னியும்

- ஆண்டவருக்கு அஞ்சுவோர் இருளில் ஒளியென மிளிர்வர் என்பதை அறிந்தும் அவரது ஆற்றலையும் உடனிருப்பையும் மறந்து மனம் போன போக்கில் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும். (திபா 12:11)

- ஆண்டவரே! என் ஆயர் எனக்கேதும் குறையில்லை என்ற வாக்குறுதியை மறந்து அவரின் பராமரிப்பை நம்பாமல் மனநிறைவின்றி வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும். (திபா 23:1)

- நானே உங்களுக்கு நாவன்மையையும் ஞானத்தையும் கொடுப்பேன் என்று அறிந்தும் என்னுடைய அறிவு ஆற்றலை மட்டும் நம்பி பயனற்ற சொற்களைப் பேசியதற்காக மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும். (லூக் 21:15 )

- ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றார் அவரது கட்டளைகளையும் இறைவார்த்தையின் வழிகாட்டுதலையும் புறக்கணித்து முறையற்ற வாழ்வு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் என்னை மன்னியும். (திபா 119:1)

நற்பணி S.P. **சவரிமுத்து.** இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம் மாத செபக் கருத்து**

- ஆயுதப்போட்டிகள் நிறுத்தப்பட்டு நாடுகளுக்கிடையே அமைதி நிலைவ
- வன்முறை கலாச்சாரம் ஒழிக்கப்பட்டு உரையாடல் ஊக்குவிக்கப்பட
- தவக்காலக் களப்பணிகள் இறைவன் விரும்பும் விடுதலையை வழங்க
- தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அமைதியுடன் நடக்கவும் அனைத்து மக்களின் நலன் பேணும் அரசு அமையவும்
- அரசுப் பொதுத்தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்காக
- இந்தியாவில் சனநாயக, மற்றும் மதச்சார்பின்மைக் கொள்கைகளும், அதைப் பேணும் அமைப்புகளும், இயக்கங்களும் வலுவுடன் செயல்பட.

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- அலைபேசி மற்றும் தொலைக்காட்சிகளில் செலவிடும் நேரத்தை குறைத்து, பயனுள்ள வகையில் செலவிடல்















படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **நீதிமொழிகள் 10-12 அதிகாரங்களுக்குள்**



# புதிய பணியாளர்கள் பயிற்சிகள்


அருள்சான்றுநிலையம்


அமைதியகம்


அம்மாபேட்டை


திருமயம்



திருவாரூர்


தங்கச்சிமடம்


சிவகங்கை


சாயல்குடி


இராம்நாடு


புதுக்கோட்டை


புதுக்கோட்டை


நமணசமுத்திரம்


கோட்டைகாடு


காளையார்கோவில்


சி.கே மங்கலம்

**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com